[22nd February 1969

ஆலேயில்தான் அந்த நெல் தேக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அது முழுமையாகக் கெடவில்லை. அதை அரிசியாக்கிய நேரத்தில் அந்த அரிசியினுடைய நிறம் மட்டும் மாறியது.

திரு. என். ஆர். தியாகராஜன் : இந்த கெட்டுபோன நெல்லே மதுரையிலுள்ள வியாபாரிகளேக் கொண்டு அறைத்து மக்களுக்கு கொடுக்கும்படி கட்டயிடப்பட்டதா? அந்த அரிசி சாப்பிட லாயக்கில்லாதது என்று பொதுமக்கள் கூறி அதை வாங்க மறுத்து விட்டார்கள். அந்த அரிசி பிறகு மலேப்பிரதேசங்களாக உள்ள கொடைக்கானல், ஊட்டியில் உள்ளவர்களுக்கு, அரிசியைப் பார்க்க காதவர்களுக்கு, அரிசியின் நிறம் தெரியாதவர்களுக்கு, அரிசியின் வாடை தெரியாதவர்களுக்கு அனுப்பப்பட்டது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அந்த அரிசி தேனிக்குப் போனது உண்மை. தேனியில் அது என்ன ஆனது என்று தெரிய வில்லை.

Seizure of paddy from smugglers.

* 21. Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(a) whether 219 bags of paddy were seized from smugglers in February 1968 near Jayankondan; and

(b) the result of the case filed against the lorry-owners?

கடத்தல்காரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட அரிசி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஜெயங்கொண்டம் அருகே 1968 பிப்ரவரியில் 219 நெல் மூட்டைகள் கடத்தல்காரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதா ?

(இ) லாரி உரிமையாளர்கள் மீது தொடுத்த வழக்கின் முடிவென்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம். ஜயங்கொண்டம் என்னுமிடத்தில் இரண்டு சரக்கு பேருந்துகளிலிருந்து (Lorry) 219 நெல் மூட்டைகள் 14—2—1968-ல் கைப்பற்றபட்டன.

(இ) ஜயங்கொண்டம் தாசில்தார், கைப்பற்றிய மூட்டை களுடன் இரண்டு லாரிகளேயும் காவல்துறை மேற்பார்வையாள ரிடம் ஒப்படைத்தார். கைப்பற்றிய நெல் மூட்டைகளுடன் இரண்டு லாரிகளும் அரியலூர், துணேக்கோட்ட மாஜிஸ்திரேட்டிடம் முன்னிலேப்படுத்தப்பட்டன. அரியலூரிலுள்ள, அரியலூர் கூட்டுறவு விற்பனேச் சங்க நிறுவனத்திடம் நெல் மூட்டைகள் ஒப் படைக்கப்பட்டு அந்த நெல்லின் விற்று முதலே நீதிமன்ற ஆணே களின்படி கட்டி விட வேண்டுமென்று மேற்படி சங்கத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு நெல், அரிசி (போக்குவரத்துக் கட்டுப்பாடு) ஆணேயின்படி குற்றம் இழைத்ததாகச் சரியான சாட்சியம் எதுவுமில்லேயாதலால், புலனாய்விற்குப் பிறகு இவ்

22nd February 1969]

வழக்கு 12—7—1968-ல் கைவிடப்பட்டது, பயணப்பட்டி எழுதி வைக்காமைக்காக, லாரியின் வலவர்களுக்கு ஐயங்கொண்டம் துணை மாஜிஸ்திரேட் அபராதம் விதித்தார்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சென்ற இரண்டாண்டுகளாக லாரி உரிமையாளர்களின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கூறி வந்திருக்கிறேன். அப்படி நடவடிக்கை எடுக்காததற்கு என்ன காரணம்? ஏதாவது சட்ட சிக்கல் இருக்கிறதா? அப்படியிருந்தால் புதிய சட்டம் கொண்டு வந்தால் என்ன? இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : லாரிகளில் தவறான முறையில் எடுத்துச் செல்பவர்கள், லாரியின் முதலாளிகள், தண்டிக்கப்படுகிறார்கள். லாரியை ஓட்டுபவர்களும் தண்டனைக்கு ஆளாகிறார்கள். இந்த நிலையில் டிரிப் ஷீட் எழுதாததற்காக ஒவ்வொரு டிரைவருக்கும் பத்து ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. கே. சுப்பையா : தலைவர் அவர்களே, இதைக் கொண்டு மாட்டு வண்டிகளில் செல்லும் நெல்லைக் கைப்பற்றும் போது அரசாங்கக்கணக்கில் அவை கொண்டு வரப்படுகின்றனவா இல்லையா என்று தெரியாமல் போவதால், அப்படி வரும் நெல் பற்றிய கணக்கை மாதந்தோறும் கூடும் டெவலப்மெண்ட் கவுன்சிலில் அறிக்கையாக வைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்கள் எங்கே மாட்டு வண்டியில் போனதைப் பிடித்தார்கள் என்று விபரம் கொடுத்தால் அந்தக் கணக்கு சேர்க்கப்பட்டிருக்கிறதா, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று விசாரித்து சொல்ல முடியும்.

திரு. டி. கே. சுப்பையா : தலைவர் அவர்களே, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாட்டுவண்டி போவதைத் தேடிப்பிடிப்பதும், விபரம் கொடுப்பதும், பெட்டிஷன் போடுவதும் இயலாத காரியம். இப்படிப்பட்ட கேள்விக்குறி இருக்கிறது என்றாலே தவறாக கொண்டு போகிறவர்கள் திருந்துவார்கள் என்பதால், அந்தமாதிரி அறிக்கையை வெளியிட அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வண்டியாக இருந்தாலும் காராக இருந்தாலும் ஒரே தண்டனைதான். மாட்டு வண்டிக்கு வேறு, லாரிக்கு வேறு என்பதல்ல. எல்லாவற்றிற்கும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

Water-supply Scheme, Dharmapuri

* 22 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state the present stage of the Dharmapuri Water-supply Scheme?